17.07.19 EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL
Std: IX STUDY MATERIAL
TAMIL

# விரிவானம் (திணைப் பாடம்)

## தண்ணீர் - கந்தர்வன்

### நெடுவினா

1. **'தண்ணீர்' - கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

உலகமே தண்ணீரால் சூழ்ந்திருக்கும்போது, உயிர்வாழக் குடிநீர் இல்லாமல் தினம்தினம் கண்ணீர் வடிக்கும் கிராம மக்களின் நிலையைக் கந்தர்வனின் 'தண்ணீர்' கதை, மிகத்தெளிவாக உணர்த்துகிறது.

**இரயில் வருகை :**

இராமேஸ்வரம் நோக்கிச் செல்லும் பாசஞ்சர் இரயில், வல்லநேந்தல் தாண்டியது. இரயிலின் அழைப்பு ஒலியைக் கேட்ட இந்திரா, தூரத்தில் இரயில் வருவதைப் பார்த்தாள். உள்ளே அம்மா 'பொட்டுத் தண்ணி இல்லை' என்று கூறுவதைக் கேட்டாள். திண்ணையில் உட்கார்ந்திருந்த ஐயா, வளர்க்கும் ஆடுகள், குட்டி போடப்போடக் கூட்டம் பெருத்துக் குபேரனாகும் கனவுக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தார்.

**இந்திராவும் இனிய தோழியரும் :**

இந்திரா, இடுப்பில் குடத்தோடு வாரியைத் தாண்டி வேகமாக ஓடினாள். மேட்டை எட்டும்போது ஏழெட்டுப் பெண்கள் குடத்தோடு இந்திராவை முந்தப் பார்த்தார்கள். முந்தியவர்களின் சடைகளைப் பிந்தியவர்கள் இழுத்தார்கள்.

இந்திரா எல்லோருக்கும் முன்பாக இடம்பிடித்துப் பதற்றமே இல்லாமல் நின்றாள். சுவரில் சாய்ந்து நின்ற பெண்கள் எகத்தாளம் பேசினார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் இந்தச் சச்சரவைப் பார்த்துவிட்டு, "ஒரு நாளைக்கு ஸ்குவார்டை வரச்சொல்லி, எல்லோரையும் அள்ளிக் கொண்டுபோய் ஜெயில்ல போடுறேன்" என்றார். பெண்கள் அமைதியானார்கள்.

**இந்திராவும் இரயில் பெட்டியும் :**

இரயில் காட்டு யானைபோலப் பிளிறிக்கொண்டு நிலையத்துக்குள் நுழைந்தது. பயணிகள் இறங்கும்முன்பாக இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் பாய்ந்தாள். அங்குள்ள குழாயை அழுத்தி, வேகவேகமாக அரைசெம்பும் கால்செம்புமாகப் பிடித்துக் குடத்தில் ஊற்றினாள்.

**பிலாப்பட்டியும் பெண் மனமும் :**

குடிநீருக்காக மூணுமைல் தூரமுள்ள பிலாப்பட்டிக்குத்தான் பெண்கள் போய் வருவார்கள். பிலாப்பட்டி ஜனங்கள் முதலில் தண்ணீர் எடுத்த பிறகுதான் வெளியூர் ஆள்களுக்கு விடுவார்கள். கிணற்றில் நீர் ஊற ஊற இறைக்கவேண்டும். இந்திராவின் அம்மா, தினம் பிலாப்பட்டிக்குப் போய்தான் தண்ணீர் கொண்டுவருவார்.

இரயில் வரும்போதுதான் வரவேண்டும். சத்தம் போடக்கூடாது. தண்ணீர் கொஞ்சம்தான் பிடிக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, இரயிலில் தண்ணீர் பிடித்து வருகின்றனர். இந்திரா உள்ளங்கையை அழுத்திக்கொண்டே இருந்தாள். பாதிக்குடம்கூட நிறையவில்லை. இன்ஜினின் ஊதல் ஒலி வந்தாலும் புறப்படத் தாமதமாகும் என நினைத்துக்கொண்டே அழுத்தினாள். இரயில் நகர்கிற மாதிரி இருந்தது.

**இந்திராவும் இராமநாதபுரமும் :**

இரயிலின் வேகம் அதிகரித்தது. பிளாட்பார முனை வருவது போல இருந்தது. படபடவென்று குடத்தைப் பாதையில் வைத்துவிட்டுக் குதிக்கப்போனாள். ஒரு வடக்கத்திப் பெண் ஓடிவந்து இந்திராவை இழுத்து வண்டிக்குள் தள்ளிவிட்டுப் புரியாத மொழியில் தற்கொலை பண்ணிக் கொள்ளப் பார்த்தாயா எனக் கோபமாகக் கத்தினாள்.

ஐயாவிடம் சின்னவள் ஓடிவந்து அக்கா இன்னும் வரவில்லை என்றாள். அம்மா படபடவென்று கத்தினாள். அண்ணன், தம்பி, மச்சினன் வீட்டு ஆட்கள் எல்லாம் ஓடிவந்து, இராமநாதபுரம் பஸ்ஸில் ஏறி வேகமாக ஓட்டச் சொல்லிக் கத்தினர். கண்டக்டரும் 'வேகமாப் போங்கண்ணே' என்று, ஒப்புக்குச் சொல்லிவிட்டார்.

இராமநாதபுரம் இரயில் நிலையத்தில் ஈ எறும்புகூட இல்லை. ஸ்டேஷன் மாஸ்டரிலிருந்து விசாரித்தார்கள்; யாரும் பார்த்ததாகச் சொல்லவில்லை. எல்லா இடங்களிலும் தேடிவிட்டு, கவலையும் அசதியுமாக ஆட்கள் ஊர் திரும்பினார்கள்.

**அம்மாவும் அன்பு மகளும் :**

ஊர்ப் பேச்சுகளைக் கேட்டு அம்மா, பொருமிக் கொண்டிருந்தாள். "எம்புள்ளை எந்த ஊரு தண்டவாளத்திலே விழுந்து கிடக்கோ" என அடக்க முடியாமல் ஆவேசம் வந்தவள்போல, இரயில் நிலையத்திற்கு ஓடினாள். பின்னாலேயே ஐயாவும் ஊர் ஜனமும் ஓடியது. அம்மா, தண்டவாளத்தின் ஓரத்திலேயே ஓட ஆரம்பித்தாள். பத்தடி ஓடியதும் ஐயா அம்மாவைப் பிடித்து இழுத்து நிறுத்தினார். தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது.

அம்மா கத்தினாள், "அந்தா இந்திரா வருது" என்று. இடுப்பில் தண்ணீர்க் குடத்தோடு இந்திரா வந்தாள். அம்மா, விம்மிக்கொண்டே போய்க் குடத்தை வாங்கினாள். மகள் வந்து சேர்ந்ததில் மலர்ந்துபோய், "பயமகளே இதையும் சுமந்துகொண்டா வரணும்?" என்றார் ஐயா. "ஊக்கும்.... நாளைக்குவரை குடிக்க எங்கெ போறது?" என்றாள் இந்திரா.